**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213002

1. District மாவட்டம் : DVAC  PS: காவல்நிலையம் CC-I  Year: ஆண்டு 2024  FIR No.: மு.த.அ. எண் 03  Date: நாள் 24.10.24

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended 2018)  Sections பிரிவுகள்: 7&8
   BNSS  106 (old CrPC 102)

   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 23.10.2024  Date to : நாள் வரை 23.10.2024

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 17.30 hrs  Time to : நேரம் வரை 20.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024  Time : நேரம் 10.30 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம் 24.10.2024 on Registration of FIR

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலம் (Typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  மண்டல அலுவலகம்

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  மண்டலம்-12, ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, நாகிரெட்டி சாலை, கிட்கோ இண்டஸ்ட்ரியல் வளாகம், சென்னை-32

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்  சுமார் - 3 கி.மீ

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  திருமதி. D. சித்ரா
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம்  இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்  வட்டாட்சியர்
   (g) Address : முகவரி  வட்ட கலால் அலுவலர் / மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம் சென்னை-3

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. P.S. சீனிவாசன், மண்டல அலுவலர் (மண்டலம் - XII) ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை-32 & 4 others. and 1 private individual

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.10.2024 (signature)

24/10/2024 (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

INSPECTOR OF POLICE,
Vigilance and Anti - Corruption
Chennai - City - I Dett,
Chennai - 16.

15. Date & Time of despatch to the court: 25.10.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ………………………….
Rank: நிலை …………………No. எண் ……….

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I குற்ற எண்.03/2024, பிரிவு-7& 8 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (2018)-ல் திருத்தப்பட்டது மற்றும் BNSS பிரிவு 106 (Cr.P.C 102) வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்-12 -ன் தொடர்ச்சி பின்வருமாறு.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு -I -ன் காவல் ஆய்வாளர் P.I.ஜோஸ்லீன் மேரி ஆகிய நான் 24.10.2024 அன்று காலை 10.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.D.சித்ரா, வட்ட கலால் அலுவலர்/மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை -3 (சென்னை மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் உத்தரவின் பேரில்) என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.A. இம்மானுவேல் ஞான சேகர், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு -I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை -16 அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I-ன் குற்ற எண்.03/2024, பிரிவு-7 & 8 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (2018)-ல் திருத்தப்பட்டது மற்றும் BNSS பிரிவு 106 (Cr.P.C 102) ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று (24.10.2024) மாலை 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர்: திருமதி.D.சித்ரா, வட்ட கலால் அலுவலர்/மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை -3. பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகர பிரிவு -I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை -16. ந.க.அ/233/2024, நாள்:24.10.2024. அய்யா, பொருள்: கூட்டுத் தணிக்கை -இருதுறைகூட்டு திடீர் தணிக்கை மண்டல அலுவலர் அலுவலகம், மண்டலம் -12, ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, நாகிரெட்டி சாலை, சிட்கோ இண்டஸ்ட்ரியல் வளாகம், கிண்டி, சென்னை என்ற அலுவலகத்தில் 23.10.2024 அன்று கூட்டுத் தணிக்கை செய்யப்பட்டது - நடவடிக்கை எடுக்க அனுப்புதல் - தொடர்பாக. பார்வை: சம்மந்தப்பட்டஆவணங்கள். சென்னை மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-1-ன் காவல் துணைகண்காணிப்பாளர்

24/10/2024

இணைந்து நேற்று 23.10.2024 மாலை 17.30 மணிமுதல் 20.00 மணிவரை, சென்னை - 32, நாகிரெட்டி சாலை, சிட்கோ இண்டஸ்ட்ரியல் வளாகத்தில் இயங்கும் மண்டலம் -12, ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர் அலுவலகத்தில் இருதுறைகூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,15,310/- மற்றம் கைப்பற்றப்பட்ட பதிவேட்டின் நகல்கள் ஆகியவற்றை மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இன்று 24.10.2024-ந்தேதி காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை குறிப்பு தகுந்த மேல் நடவடிக்கைக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய, ஒப்பம் 24.10.2024 (D.சித்ரா), வட்ட கலால் அலுவலர்/ மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை -3 இணைப்பு சென்னை ஆய்வுக் குழு மற்றும் சென்னை நகர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை நகரப் பிரிவு-I காவல் துணைகண்காணிப்பாளர் தலைமையில், சென்னை -32, நாகிரெட்டி சாலை, சிட்கோ இண்டஸ்ட்ரியல் வளாகத்தில் இயங்கும் மண்டலம் -12, ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர் அலுவலகத்தில் இன்று 23.10.2024 மாலை 17.30 மணி முதல் 20.00 மணிவரை மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் ஆய்வின் நடவடிக்கைகள். Received the letter and registered a case in V&AC, Chennai City –I Dett., Cr.No.3/2024, u/s.7 & 8 of Prevention of Corruption Act (Amendment) Act 2018 & 106 BNSS (Old 102 Cr.P.C) Sd/ Tmt.P.I.Josline Mary, Inspector of Police, V&AC, CC-I Dett., Chennai, dated:24.10.2024. இணைப்பில் உள்ள இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை பின்வருமாறு சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்து இன்று (23.10.2024) நாகிரெட்டி சாலை, சிட்கோ இண்டஸ்ட்ரியல் வளாகத்தில் இயங்கும் மண்டலம் -12, ஆலந்தூர்,

24/10/2024

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர் அலுவலகம் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை.

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திருமதி.D. சித்ரா,<br>வட்ட கலால் அலுவலர்/<br>சிறப்பு பணி ஆய்வுக் குழும அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம்,<br>சென்னை -3.<br><br>2. திரு.A.இம்மானுவேல் ஞான சேகர்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சென்னை நகரப் பிரிவு-I,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை -16.<br><br>3. திருமதி.V.செல்வி,<br>காவல் ஆய்வாளர்,<br>சென்னை நகரப் பிரிவு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை -16.<br><br>4. திருமதி.P.I.ஜோஸ்லீன் மேரி,<br>காவல் ஆய்வாளர்,<br>சென்னை நகரப் பிரிவு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை -16.<br><br>5. திரு.சீனிவாசன்,<br>உதவி ஆய்வாளர்,<br>சென்னை நகரப் பிரிவு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை -16. |

சென்னை-32, கிண்டி, நாகி ரெட்டி சாலை, சிட்கோ இண்டஸ்ரியல் வளாகத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர், மண்டலம் -12, ஆலந்தூர் என்ற முகவரியிலுள்ள மண்டல அலுவலர், மண்டலம் -12, அலுவலகத்தில் பொதுமக்களிடமிருந்து பணிகளை செய்ய அதிகளவில் கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் நடைபெற்ற இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை சென்னை, வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், வட்ட கலால் அலுவலர்/மாவட்ட துணை ஆய்வுக் குழும

24/10/2024

அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் ஆளிநர்கள் இன்று (23.10.2024) மாலை சுமார் 17.30 மணியளவில் இணைந்து இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மண்டல அலுவலர், மண்டலம் -12 அலுவலகம் கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. முதல் தளத்தில் மண்டல அலுவலர் அலுவலகம், அதன் அருகில் இரண்டு செயற் பொறியாளர்கள் அறைகள் மற்றும் எதிரில் ஐந்து உதவி செயற் பொறியாளர் அலுவலர் அறைகள் செயல்பட்டு வருகிறது. அலுவலகத்திற்கு செல்லும் போது மண்டல அலுவலர் திரு. P.S. சீனிவாசன் அவர்களது அறையில் செயற் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கலந்தாய்வு கூட்டம் முடிந்தவுடன் திடீர் கூட்டுத் தணிக்கை ஆய்வு குழும அலுவருடன் அவரது அறையில் செயற் பொறியாளர்கள் திரு.பாண்டியன் மற்றும் உதவி செயற் பொறியாளர் திரு.ரவி ராஜன், Unit -36 ஆகியயோர் அமர்ந்திருந்தனர். அதிகாரிகளிடம் துணை ஆய்வுகுழும அலுவலர் அறிமுகம் செய்து கொண்டு இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட போது அவரது அலுவலக அறை மேஜை மீது வெள்ளை நிற கவரில் மீது Div -162 என்று எழுதி அந்த கவரினுள் ரூ500 X 48 = ரூபாய் 24,000/- இருந்தது. அது குறித்து விசாரித்த போது செயற் பொறியாளர் திரு.ரவிராஜன் அவருடைய பணம் என்று தெரிவித்தார். இது சம்மந்தமாக திரு. ரவி ராஜன் அவர்களை விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக கூறியதால் துணை ஆய்வு குழும அலுவலரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதே அறையில் திரு.சீனிவாசன், மண்டல அலுவலர் அவர்களை சோதனை செய்த போது அவருடைய மணிபர்சில் ரூ.7,000/- இருப்பதாக கூறி ஆஜர் செய்த பணத்தை எண்ணி பார்த்த போது அதில் ரூ.10,000/- காணப்பட்டது. அது குறித்து விளக்கம் கேட்ட போது தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார் அதற்கான முகாந்திரம் எதுவும் இல்லாத காரணத்தினால் அந்த பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.பாண்டியன், செயற் பொறியாளர் என்பவரது மணிபர்சில் ரூ.4,500/- இருப்பதாக கூறி ஆஜர் செய்தார். இது குறித்து விசாரணை செய்த போது தன்னுடைய சொந்த பணம் என்று கூறினார். அரசு அலுவலகத்தில் பாரமரிக்கப்படும் கையிருப்பு பண பதிவேடு அலுவலகத்தில் பராமரிக்கப்படாத காரணத்தினால் அந்த பணமும் கைப்பற்றப்பட்டது. மண்டல அலுவலர் அறைக்கு எதிரே உள்ள உதவி செயற் பொறியாளர் திரு.குமார், யூனிட் - 37 என்பவரின் அறையில் சோதனை செய்த போது அவருடைய அறையின் மேஜை மீது வைக்கப்பட்டிருந்த நீல நிற டிரேயின் அடியில் ஆபிஸ் கவர் மூன்றில்- தலா ரூ.5,000/- இருந்த கவர் கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடைய பாக்கெட்டில் ரூ.6,810/- ம் வைத்திருந்தார். இது குறித்து விசாரித்த போது அந்த பணம் எப்படி வந்தது என்று தெரியாது என்று கூறியதால்

24/10/2024

அந்த பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.மணிமொழி, உதவி செயற் பொறியாளர், யூனிட்-35 அறையின் உள்ளே அமர்ந்திருந்த திரு. முத்து முருகன் என்பவரை விசாரித்த போது அவர் G Enterprises என்ற நிறுவனத்தின் Contract Supervisor -ஆக பணிபுரிவதாக கூறினார். அவரை சோதனை செய்த போது அவர் வைத்திருந்த ரூ.500X 44=22,000/- மற்றும் 500X 66=33,000/- ஆக மொத்தம் ரூ55,000/-மும் மற்றும் அவருடைய பேண்ட் பாக்கெட்டில் ரூ.12,500/- மும் தனியாக வைத்திருந்தார். இத்தொகையை குறித்து விளக்கம் கேட்ட போது ரூ.12,500/- தன்னுடைய சம்பள பணமென்றும் ரூ55,000/- அவருடைய முதலாளி வாகனத்திற்கு டீசல் போட கொடுத்ததாக கூறினார். அவர் கூறியதில் டீசலுக்காக வைத்திருந்தாக கூறிய பணத்திற்கான காரணம் ஏற்றுக்கொள்ளபடியாக இல்லாத காரணத்தினால் அந்த பணம் கைப்பற்றப்பட்டது. அவர் சம்பள பணம் என்று கூறிய ரூ.12,500/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மண்டல அலுவலகத்தில் இருந்த செயற்பொறியாளர் -1 திரு.சுரேஷ் குமார் அலுவலக அறையை சோதனை செய்த போது அவர் தன்னுடைய சொந்த பணம் என எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.2,370/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் உதவி செயற்பொறியாளர் திரு.ஈஸ்வரன் அவர்களது அறையை சோதனை செய்த போது அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூபாய் 700/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.கணேசன் அவர்களது அறையை சோதனை செய்த போது அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூபாய் 610/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர் திரு.மணிமொழி அவர்களது அறையை சோதனை செய்த போது அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூபாய் 2,500/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருடைய அறையில் இருந்த உதவி பொறியாளர், Division -156 திரு. வெங்கடாசல திருப்பதி என்பவரை சோதனை செய்த போது அவர் தன்னுடைய சொந்த பணம் என எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.630/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது மற்றொரு உதவி பொறியாளர், Division -157 திரு.மதியழகன் என்பவரை சோதனை செய்த போது அவர் தன்னுடைய சொந்த பணம் என எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.1,010/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மண்டல அலுவலர் அறைக்கு வெளியில் இருந்த மண்டல அலுவலரின் உதவியாளர் திரு. ஆனந்தன் அவர்களை சோதனை செய்த போது அவருடைய Lunch Bag -ல் இருந்த Lalitha Jewellery என்ற purse -ல் K.Ganpathraj Pawn Broker. No.R.2015 dated:28.09.2024 என்ற தேதியிட்ட நகை அடகு சீட்டில் ரூ.8,700/-ம் தனியாக அதே purse -ல் ரூ.700/-ம் இருந்தது. அந்த பணத்தை குறித்து விளக்கம் கேட்ட போது, நகையை மீட்க கொண்டு வந்த பணம் என்று கூறி அடகு சீட்டை காண்பித்ததால் அந்த

24/10/2024

பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப்பட்டது. சோதனையின் போது அலுவலக அக்டோபர் மாத வருகை பதிவேடு (3 sheets) நகல் எடுக்கப்பட்டு, மண்டல அலுவரால் சான்றொப்பம் பெறப்பட்டது. அலுவலர்களின் தினசரி பண கையிருப்பு பதிவேடு குறித்து மண்டல அலுவலரிடம் கேட்ட போது அந்த பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என்று கூறினார். மேலும் Contract Supervisor திரு.முத்து முருகன் என்பவரை சோதனை செய்த போது அவரிடம் இருந்து உதவி பொறியாளரால் பராமரிக்கப்பட்டு வரும் M-Book (Division -158, Unit-35, Zone –XII, Round about restoration "BT" Road Cut work, 8th Street, Est.No.NM/2023-24/6746) என்ற புத்தகம் கடைசியாக 18.06.2024 அன்று உதவி பொறியாளர் (Division-158) திரு.ரஜினிகாந்த் என்பவரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. மற்றொரு M-Book (Round about Restoration BT Road at 9th Street, Division -158, Unit -3, Zone –XII Est.No.NM/2023-24/6748) என்ற புத்தகம் கடைசியாக 22.06.2024 அன்று உதவி பொறியாளர் திரு.ரஜினிகாந்த் என்பவரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. அத்துடன் மேற்கண்ட இரண்டு பணிகளுக்குமான Bill தொகை ரூ.4,43,491/-, ரூ.2,21,748/- ஆகியவை AE., Division -158 திரு.ரஜினிகாந்த் என்பவரால் தயார் செய்யப்பட்டு AEE., Unit -35 திரு.மணிமொழி என்பவரிடம் கையொப்பம் பெறுவதற்காக அவர் வைத்திருந்திருந்ததை . Xerox எடுத்து அதில் AEE., திரு.மணிமொழி என்பவரிடம் சான்றொப்பம் பெற்று, நகல் கைப்பற்றப்பட்டது. விசாரணையில் மேற்கூறிய இரண்டு Bill -களுக்கும் AEE., திரு.மணிமொழி கையொப்பமிடுவதற்கு கையூட்டாக கொடுப்பதற்கு வைத்திருந்தது தெரிய வந்தது. இரு துறை கூட்டு தணிக்கையின் போது மொத்தம் ரூ.1,15,310/- விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (23.10.2024) மாலை சுமார் 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. மேற்படி கூட்டுத் தணிக்கையின் போது (1) திரு.சீனிவாசன், மண்டல அலுவலர், மண்டலம் -XII, திரு.பாண்டியன், செயற் பொறியாளர், திரு.ரவிராஜன் செயற்பொறியாளர், திரு.குமார், செயற்பொறியாளர், திரு. முத்து முருகன், Contract Supervisor ஆகியோர் வாக்குமூலம் பதியப்பட்டது. (ஒப்பம்/-XXX) 23.10.2024 (திருமதி.D. சித்ரா), வட்ட கலால் அலுவலர்/ மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை -3. (ஒப்பம்/-XXX) 23.10.2024 (திரு.A.இம்மானுவேல் ஞான சேகர்), காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 23.10.2024, (V.செல்வி) காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.கதுறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 23.10.2024,

24/10/2024

(திருமதி.P.I.ஜோஸ்லீன் மேரி), காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 23.10.2024 (திரு.சீனிவாசன்), உதவி ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 23.10.2024 (திரு.P.S.சீனிவாசன்), மண்டல அலுவலர் (மண்டலம் -XII) ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX23.10.2024), (திரு.சுரேஷ்குமார்), செயற் பொறியாளர் -1 (மண்டலம் -XII), ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX23.10.2024), (திரு.K.பாண்டியன்), செயற் பொறியாளர் -2, (மண்டலம் -XII), ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX23.10.2024), (திரு.குமார்), உதவி செயற்பொறியாளர் (Unit -37), (மண்டலம் -XII), ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX23.10.2024), (திரு.S.ரவிராஜன்), உதவி செயற்பொறியாளர் (Unit -36), ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX23.10.2024), (திரு.மணிமொழி), உதவி செயற்பொறியாளர் (Unit -35), ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX23.10.2024), (திரு.ஈஸ்வரன்), கூடுதல் உதவி செயற்பொறியாளர், (மண்டலம் -XII), ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, கிண்டி, சென்னை. (ஒப்பம்/-XXX) 23.10.2024 (திரு. முத்து முருகன்), Contract Supervisor G Enterprises, வடபழனி, சென்னை. Sd/A.Immanuel Gnana Sekar, Deputy Superintendent of Police, Chennai City –I Dett., Chennai, dated:24.10.2024.

அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திருமதி.D.சித்ரா, வட்ட கலால் அலுவலர்/மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை -3 அவர்களின் புகார் மனு ந.க.அ/233/2024, நாள்:24.10.2024-ன் அசல் ஆகியவற்றை கனம்.சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

24/10/2024

INSPECTOR OF POLICE,
Vigilance and Anti - Corruption
Chennai - City - I Dett,
Chennai - 16.